
என்றும் மாணவர் நலனில்...
TAF IAS ACADEMY
தமிழகம் முழுவதும் 60+ கிளைகள் - 16 ஆண்டுகளில் 15895+ பேருக்கு அரசுப்பணி
இந்திய வரலாறு
மற்றும்
பண்பாடு
AAMU PUBLICATION
TENKASI
TNPSC
பழங்கால இந்தியா
இடைக்கால இந்தியா
பண்பாடு
DISCOUNT
10% OFF
புத்தக தேவைக்கு :
COURIER : தபாலில் பெற
BUY NOW
9566974903,8940077756
https://www.tafiasacademy.in/shop/

# TAF BOOK's

# இந்திய வரலாறு மற்றும் பண்பாடு

## (புதிய பாடத்திட்டம்)








Coaching for :
UPSC - TNPSC
POLICE - SI
TET -TRB - SSC
BANKING
RAILWAY

புத்தக தேவைக்கு (கூரியர் & தபால்) பெற...
செல் : 95669 74903

16 ஆண்டுகளில் 15985+பேருக்கு அரசுப்பணி
தமிழகம் முழுவதும் 60 கிளைகள்

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

TAF IAS ACADEMY

tafiasacademyho@gmail.com www.tafiasacademy.in TAF IAS ACADEMY / TAF POLICE

திரு. J.ஆகாச மூர்த்தி M.Com.,LLB., நிறுவனர், TAF IAS ACADEMY
திரு. M.மாரியப்பன் M.Com., நிர்வாக இயக்குநர், TAF IAS ACADEMY

Head Office : TENKASI
9597587300 TAF IAS ACADEMY

# பதிப்புரிமை

ஆசிரியரின் எழுத்து மூலமான அனுமதியின்றி இப்புத்தகத்தை மறுபதிப்பு செய்யவோ வேறு மொழிகளில் மொழி பெயர்க்கவோ, அச்சடிக்கவோ கூடாது.



| | | |
|---|---|---|
| தலைப்பு | : | இந்திய வரலாறு மற்றும் பண்பாடு |
| ஆசிரியர் | : | TAF வரலாற்று துறை |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு, மே 2025 |
| பக்கங்கள் | : | 360 பக்கங்கள் |
| விலை | : | ரூ.350 /– |

இப்புத்தக உருவாக்கத்திற்கு உதவி செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி...!



TAF BOOKS Cuddalore

AAMU PUBLICATION

MOBILE 95669 74903, 89400 77746

WEBSITE www.tafiasacademy.com

E-MAIL tsiacademyho@gmail.com

FACEBOOK TNPSC – LIFE (TAF)

YOUTUBE : TAF IAS ACADEMY

TELEGRAM : TAF IAS ACADEMY

259/81 C, KOOLAKADAI BAZAR STREET,
TENKASI,Tirunelveli, Tamil Nadu, 627811



**Thanks To All The Contributors Of This Book..**

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | வரலாறு – அறிமுகம் | 01 - 02 |
| 2. | சிந்து சமவெளி நாகரிகம் (ம) அகழாய்வுகள் | 03 - 21 |
| 3. | வேதகாலம் | 22 - 41 |
| 4. | சமணம் (ம) பௌத்தம் | 42 - 51 |
| 5. | மௌரியர்கள் | 52 - 73 |
| | 5.1 மௌரியர்களுக்கு முந்தைய இந்தியா | 52 - 54 |
| | 5.2 மௌரிய அரசர்கள் | 55 - 64 |
| | 5.3 மௌரியர்களுக்கு பிந்தைய இந்தியா | 65 - 73 |
| 6. | குப்தர்கள் மற்றும் நிர்வாகம் | 74 - 91 |
| 7. | ஹர்ஷப் பேரரசு | 92 - 97 |
| 8. | டெல்லி சுல்தான்கள் | 98 - 130 |
| | 8.1 அரேபியர் (ம) துருக்கியர் படையெடுப்பு | 98 - 104 |
| | 8.2 டெல்லி சுல்தானிய அரசர்கள், நிர்வாகம் | 105 - 130 |
| 9. | விஜயநகர (ம) பாமினி அரசுகள் | 131 - 160 |
| 10. | முகலாயர்கள் மற்றும் நிர்வாகம் | 161 - 187 |
| 11. | மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் ஆட்சி | 188 - 211 |

| | | |
|---|---|---|
| 12. | தென் இந்திய வரலாறு | 212 - 295 |
| | 12.1 சங்க காலம் | 212 - 227 |
| | 12.2 களப்பிரர்கள் | 228 |
| | 12.3 சாளுக்கியர்கள் | 229 - 235 |
| | 12.4 இராஷ்டிரகூடர்கள் | 236 - 240 |
| | 12.5 பல்லவர்கள் | 241 - 257 |
| | 12.6 சேரர்கள் | 258 - 259 |
| | 12.7 சோழர்கள் | 260 - 279 |
| | 12.8 பாண்டியர்கள் | 280 - 295 |
| 13. | இந்திய சமூகப்பண்பாட்டு வரலாற்றில் மாற்றங்களும் தொடர்ச்சியும் | 296 - 323 |
| | 13.1 இந்திய பண்பாட்டின் இயல்புகள் | 296 - 305 |
| | 13.2 வேற்றுமையில் ஒற்றுமை – இனம், மொழி, வழக்காறு<br>இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு, சமூக நல்லிணக்கம் | 305 - 317 |
| | 13.3 கலை, அறிவியல், இலக்கியம் (ம) தத்துவம் ஆகிய வெவ்வேறு<br>துறைகளில் தனித்துவம் கொண்ட ஆளுமைகள் | 318 - 323 |
| 14. | வினாத்தாள்கள் | 324 - 353 |
| | 14.1 **TNPSC** அசல் வினாத்தாள் | 324 - 342 |
| | 14.2 மாதிரி வினாத்தாள் | 343 - 353 |

## பாடத்திட்டம்

## இந்திய வரலாறு மற்றும் பண்பாடு

**சிந்து சமவெளி நாகரிகம் - குப்தர்கள் - தில்லி சுல்தான்கள், முகலாயர்கள் மற்றும் மராத்தியர்கள் - விஜயநகர மற்றும் பாமினி அரசுகளின் காலம் - தென் இந்திய வரலாறு; இந்திய சமூகப்பண்பாட்டு வரலாற்றில் மாற்றங்களும் தொடர்ச்சியும் - இந்திய பண்பாட்டின் இயல்புகள் – வேற்றுமையில் ஒற்றுமை – இனம், மொழி, வழக்காறு இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு, சமூக நல்லிணக்கம் – கலை, அறிவியல், இலக்கியம் (ம) தத்துவம் ஆகிய வெவ்வேறு துறைகளில் தனித்துவம் கொண்ட ஆளுமைகள்**



நெடுங்கல் சான்று (Menhir)




மூடி உள்ள தாழி, ஆதிச்சநல்லூர்



கல்வட்டமும் நெடுங்கல்லும், கொடுமணல்



ஈமத் தொட்டி



கற்திட்டை (Dolmen)



கற்பலகைகள் கொண்டு உருவாக்கப்பட்ட கல்லறை (Cist) கொடுமணல்



கொடக்கல் / குடைக்கல், கேரளா



தொப்பிக்கல், கேரளா



பத்திக்கல், கேரளா


# 01 வரலாறு - அறிமுகம்

## வரலாறு:

- வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகளின் **கால வரிசைப் பதிவு** ஆகும். வரலாறு என்ற சொல் கிரேக்கச் சொல்லான **'இஸ்டோரியா' (Istoria)** என்பதிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் **"விசாரிப்பதன் மூலம் கற்றல்"** என்பதாகும்.
- வரலாறு எழுதுவது பண்டைய கிரேக்கர்களின் காலத்தில் தொடங்கியது. கிரேக்கத்தின் **ஹெரோடோடஸ் (பொ.ஆ.மு. 484 - 425) வரலாற்றின் தந்தை** என கருதப்படுகிறார்.
- **தொல் தாவரவியலாளர்கள் (Palaeobotanists):** பழமையான வேளாண்மையையும், மனிதருக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான உறவையும் குறித்து ஆய்வு செய்பவர்கள் **தொல்தாவரவியலாளர்கள்** எனப்படுவர்.

### உங்களுக்கு தெரியுமா?

- தீப்பெட்டி இன்றி நெருப்பை உருவாக்கும் பழக்கம் **நீலகிரி மாவட்டத்தின்** சில கிராமங்களில் இன்றைக்கும் உள்ளது.
- புவி **சுமார் 4.54 பில்லியன் ஆண்டுகளுக்கு** முன்பு உருவானதாக கருதப்படுகிறது.
- நுண்ணுயிரிகளின் வடிவில் உயிர்கள் தோன்றியதற்கான சான்றுகள் **3.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்** காணப்படுகின்றன.
- ஹோமினின்கள் (மனித மூதாதையர்) **5 - 7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்** தோன்றினர்.
- **சிம்பன்சி மற்றும் பிக்மி சிம்பன்சி (பொனாபோ)** வகை இனங்கள் நமக்கு நெருக்கமான, தற்போதும் வாழும் உயிரினங்கள் ஆகும்.
- சிம்பன்சி இனத்தின் மரபணுவை (டி.என்.ஏ) ஆய்வு செய்ததில் அதன் பண்புகள் **மனித இனத்துடன் 98 %** ஒத்துள்ளது.
- உடற்கூறு ரீதியாக **ஹோமோ சேப்பியன்ஸ்** என்று அழைக்கப்படும் நவீன மனிதர்கள் (அறிவுக் கூர்மையுடைய மனிதன்) **3 லட்சம் ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவில்** தோன்றி சுமார் **60,000 ஆண்டுகளுக்கு** முன் உலகின் பல பகுதிகளுக்கு பரவினர்.
- பண்டைய மனிதர்கள் கற்களில் துணை கொண்டு கூரிய ஆயுதங்களைச் செய்தனர். ஆயுதங்கள் செய்ய சிக்கிமுக்கி கல் மிகவும் ஏற்றதாக இருந்தது. **சக்கரம்** மனித வரலாற்றில் ஒரு முதல் தரமான கண்டுபிடிப்பாகும்.


வரலாற்றின் ஆதாரங்கள்
தொல்பொருள் ஆதாரங்கள்
பானைகள்
பொம்மைகள்
கருவிகள்
அணிகலன்கள்
நாணயங்கள்
கல்வெட்டுகள்
பாறை கல்வெட்டுகள்
கோயில் சுவர் கல்வெட்டுகள்
உலோகத் தூண்
நினைவுச் சின்னங்கள்
அரண்மனைகள்
கோட்டை
கோயில்கள்
ஸ்தூபி
மடங்கள்
திருமலை நாயக்கர் மஹால்
வேலூர்
தஞ்சாவூர்
சாஞ்சி
டபாங்
இலக்கிய ஆதாரங்கள்
இதிகாசங்கள் & பாடல்கள்
வெளிநாட்டுப் பயணி குறிப்புகள்
இந்திய ஆசிரியர்களின் நூல்கள்
நாட்டுப்புற கதைப் பாடல்கள்
மதசார்பற்ற இலக்கியம்
மத சார்புள்ள இலக்கியம்
இதிகாசங்கள்
பக்தி இலக்கியங்கள்
ராமாயணம்
மகாபாரதம்
மணிமேகலை
தேவாரம்
நாலாயிர திவ்யபிரபந்தம்
திருவாசகம்

# 02

# சிந்து சமவெளி நாகரிகம் (ம) அகழாய்வுகள்

## நாகரிகங்கள்

- **நாகரிகம்** என்ற சொல் **சிவிஸ் (Civis)** என்ற **இலத்தீன் மொழி** சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் **நகரம்** ஆகும்.
- மனிதன் நிலையாக வாழ தொடங்கிய காலமே நாகரிகத்தின் தொடக்கமாக கருதப்படுகிறது.
- உலகில் 4 தொன்மையான நாகரிகங்கள் இருந்தன.

| | ஆறுகள் |
|---|---|
| **மெசபடோமிய நாகரிகம்** (3500 - 2000 பொ.ஆ.மு) | - டைகிரிஸ், யூப்ரடிஸ், ஆற்றுப்படுகை |
| **சிந்துசமவெளி நாகரிகம்** (3300 - 1900 பொ.ஆ.மு) | - சிந்து |
| **எகிப்து நாகரிகம்** (3100 - 1100 பொ.ஆ.மு) | - நைல் |
| **சீன நாகரிகம்** (1700 - 1122 பொ.ஆ.மு) | - மஞ்சள் (ஹீவாங்கோ) |

## மக்கள் நதிக்கரையில் குடியேறியதற்கான காரணங்கள் :

- வளமான மண் காணப்படுதல்.
- ஆறுகளில் பாயும் **நன்னீர் குடிப்பதற்கும், நீர் பாசனத்திற்கும், கால்நடைகளின் பாசனத்திற்கும்** பயன்பட்டது.
- போக்குவரத்திற்கு ஏற்ற வழி காணப்பட்டது.

> பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால் இவை **நாகரிகத்தின் தொட்டில்கள்** என அழைக்கப்படுகின்றன.

### மெஹெர்கர் – சிந்துவெளி நாகரிகத்துக்கு முன்னோடி

- ✓ மெஹெர்கர் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த ஓர் இடம் ஆகும்.
- ✓ இது **பாகிஸ்தான்** நாட்டில் பலுசிஸ்தான் மாநிலத்தில் போலன் ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.
- ✓ இங்கு தொடக்க கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன.
- ✓ இங்குள்ள மக்கள் **வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும்** ஈடுபட்டதற்கான சான்று கிடைத்துள்ளது.
- ✓ **பொ.ஆ.மு.7000 -** ஐ ஒட்டிய காலத்திலேயே மெஹெர்கரில் நாகரிகத்துக்கு முந்தைய வாழ்க்கை நிலவியதற்கான தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ✓ பலுசிஸ்தான் அகழாய்வு செய்தவர் - **சர் ஆரெல் ஸ்பெய்ன் (1926)**
- ✓ இதன் கலாச்சாரமானது **குல்லி கலாச்சாரம்** என்றழைக்கப்படுகிறது.

## சிந்துவெளி நாகரிகம்

### சிந்து வெளி நாகரிகம் - பொதுவான உண்மைகள்

- ✓ உலகின் மிகப்பழமையான நாகரிகங்களில் ஒன்று.
- ✓ உலகின் பழமையான **நான்கு** நாகரிகங்களில் பெரிய பரப்பளவு கொண்டது.
- ✓ உலகின் **முதல் திட்டமிடப்பட்ட நகரங்களை** கொண்டது.
- ✓ மேம்பட்ட சுகாதாரம் மற்றும் வடிகால் அமைப்பு கொண்டது.
- ✓ இவர்களிடம் சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய உணர்வு மேலோங்கியிருந்தது.

- இந்தியாவின் **வடமேற்கு பகுதியிலும், பாகிஸ்தானிலும் பொ.ஆ.மு.3000** கால அளவில் தோன்றிய நாகரிகங்களும் பண்பாடும் மொத்தமாக சிந்துவெளி நாகரிகம் எனப்படுகிறது.



- இது சிந்து நதிக்கு அப்பாலும் பரவியுள்ளதால் சிந்து சமவெளி நாகரிகம் என்பதற்கு மாற்றாக **சிந்துவெளி நாகரிகம்** என்று அழைக்கப்படுகிறது.
- சிந்துவெளி நாகரிகமே இந்தியப் பண்பாட்டு உருவாக்கத்துக்கான அடித்தளம் ஆகும்.
- இந்தியாவில் முதற்கட்ட நகரமயமாக்கத்தின் சின்னமாக சிந்துவெளி நாகரிகம் உள்ளது.
- சிந்துவெளி நாகரிகம் **இந்திய நாகரீகத்தின் தொடக்கம் (அ) தொட்டில்** என அழைக்கப்படுகிறது. இந்நகர நாகரீகம், முதன் முதலில் **1921 ல் கண்டறியப்பட்டதாகும்.**
- இந்நாகரிகம் அடையாளம் காணப்பட்ட முதல் இடம் **ஹரப்பா** என்பதால் இது **ஹரப்பா நாகரிகம்** என்றும் அழைக்கப்படுகிறது.
- உலகில் வேளாண்மையும் விலங்கு வளர்ப்பும் மிக முன்பே தொடங்கிவிட்ட பகுதிகளில் சிந்து பகுதியும் **(மெஹர்கர்)** ஒன்று.

**எல்லைகள்**


- மொத்த பரப்பளவு - (1.5 மில்லியன் ச.கி.மீ இல்லாத பட்சத்தில் 1.3 மில்லியன் ச.கி.மீ என கொள்ளலாம்).
- ஹரப்பா நாகரிகம் வடக்கிலிருந்து தெற்காக 1100 கி.மீ தொலைவும், மேற்கிலிருந்து கிழக்காக 1600 கி.மீ தொலைவும் பரவியிருந்தது.

வடக்கு (வடகிழக்கு) - ஷார்ட்டுகை
(ஆப்கானிஸ்தான்)

மேற்கு - சட்காஜென் - டோர்
(பாகிஸ்தான்)

கிழக்கு - ஆலம்கிர்புர்
(உத்திரபிரதேசம்)

தெற்கு - தைமாபாத்
(மகாராஷ்டிரம்)




- ஹரப்பா நாகரிகம் 3 படிநிலைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
  - ✓ தொடக்க கால ஹரப்பா - **பொ.ஆ.மு 3000 - 2600**
  - ✓ முதிர்ச்சி அடைந்த ஹரப்பா - **பொ.ஆ.மு 2600 - 1900**
  - ✓ பிற்கால ஹரப்பா - **பொ.ஆ.மு 1900 - 1700**

**தொடக்க கால ஹரப்பா :**

- மக்கள் சமவெளியில் பெரும் **கிராமங்களை** உருவாக்கி அங்கு வாழ்ந்தனர்.
- ஹரப்பா நாகரித்தின் தொடக்க நிலையில் கிராமங்களும், ஊர்களும் வளர்ச்சி பெற்றன.
- நகரங்கள் தோற்றம் பெற்றன.
- எ.கா. - **ஆம்ரி, கோட்டிஜி**

**முதிர்ச்சி அடைந்த ஹரப்பா :**

- **பெரிய நகரங்கள்** எழுச்சி பெற்றன.
- முதிர்ந்த ஹரப்பா பண்பாடு கட்டத்தில் நகர மையங்கள் தோன்றின.
- **ஹரப்பா பண்பாடு** உச்சகட்டத்தில் இருந்தது.
- **எ.கா - காலிபங்கன்**

# 03 வேதகாலம்

## வேதம்:

- **வித்** என்ற **சமஸ்கிருத** வேர்ச்சொல்லிருந்து **வேதம்** என்ற சொல் தோன்றியது. இதற்கு **அறிவுக்களஞ்சியம்** என்று பொருள்.
- வேதங்கள் மொத்தம் நான்கு வகைப்படும். அவை ரிக், யஜீர், சாமம், அதர்வணம் வேதங்கள் ஆகும். இவை முற்கால வேதம் (ரிக்), பிற்கால வேதங்கள் (யஜூர், சாமம், அதர்வணம்) எனப்படும்.
- இதன் அடிப்படையிலேயே வேதகாலம் முன்வேதகாலம், பின்வேதகாலம் என்று இருவேறு பிரிவாகப் பிரிக்கப்படுகிறது.
- வேதகால இலக்கியங்கள், பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றைக் கொண்டதாகும். இதிகாசங்கள், புராணங்கள் முதலியன வேதகாலத்தைப் பற்றி அறிவதற்கான சான்றுகளாத் திகழ்கின்றன.

## சிந்து சமவெளி நாகரிகம் , வேதகால நாகரிகம் வேறுபாடு :

| சிந்து சமவெளி நாகரிகம் | வேதகால நாகரிகம் |
|---|---|
| ➢ நகர நாகரிகம் | ➢ கிராம நாகரிகம் |
| ➢ முதன்மைத் தொழில் - விவசாயம், வணிகம் | ➢ நாடோடிகளாக வாழ்ந்தனர் |
| ➢ உருவ வழிபாடு உண்டு | ➢ உருவ வழிபாடு இல்லை |
| ➢ இரும்பை அறிந்திருக்கவில்லை | ➢ இரும்பை அறிந்திருந்தனர் |
| ➢ குதிரை பயன்பாட்டில் இல்லை | ➢ குதிரையை பயன்படுத்தினர் |

## ரிக் வேதம் :

- இந்தியாவின் பண்டையகால வரலாற்றை அறிய உதவும் முதன்மையான சான்று **ரிக் வேதம்** ஆகும். இவ்வேதம் 10 **மண்டலங்களையும்** 1028 **பாடல்களையும்** கொண்டது.
- ரிக்வேதத்தில் - 3 வது மண்டலம் ஆனது சாவித்ரி என்ற கடவுளுக்காக **விஸ்வாமித்ரா** எழுதிய **காயத்ரி மந்திரத்தைப்** பற்றி குறிப்பிடுகிறது.
- 9 வது மண்டலம் **சோமா** என்ற கடவுளுக்காக அருளப்பட்டது.
- **ரிக்** என்ற சொல்லிற்குத் **துதித்தல்** அல்லது **வழிபடல்** என்பது பொருள். இறைவனைத் துதிப்பாடல்களால் பாடி வணங்குவதற்குரிய வழிகளைக் கூறுகிறது.
- அக்னி, பிரஜாபதி, ருத்ரன், வருணன், மித்ரன், இந்திரன் போன்ற தெய்வங்களை வேதகால மக்கள் வழிபட்டதாக ரிக் வேதம் கூறுகிறது.
- **ரிக் வேதம் சுமார் கி.மு** 1200 ஆம் ஆண்டில் ஆக்கப்பட்டிருக்கலாம் என்று **மாக்ஸ்முல்லர்** மற்றும் **ஐரோப்பிய அறிஞர்கள்** கூறுகின்றனர்.
- ரிக் வேதம் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருந்தாலும், முண்டா மற்றும் திராவிட மொழிகளைச் சேர்ந்த 300 சொற்கள் அதில் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இது முந்தையகால மக்களுடனான பண்பாட்டுக் கலப்புகளைக் குறிக்கிறது.
- **ரிக் வேதத்தில் அஸ்வா (குதிரை) என்னும் சொல் 215 முறை இடம் பெற்றுள்ளது. அதைப் போலவே ரிஷபா (காளை) என்னும் சொல்** 170 **முறை** இடம்பெற்றுள்ளது.
- மேலும் ரிக் வேதத்தில் நகர்ப்புற வாழ்க்கை முறை குறித்து எந்தத் தடயமும் இல்லை.
- ஹரப்பா பண்பாட்டில் **குதிரை இருந்ததற்கான சான்றுகளில்லை.** எனவே ஆரியர்களை ஹரப்பா பண்பாட்டோடு தொடர்புபடுத்துவது பொருந்திப் போவதாயில்லை.

## யஜுர் வேதம் :

- யாஜ் என்ற **சமஸ்கிருதச்** சொல்லிருந்து **யஜுர் என்ற சொல்** தோன்றியது. இதற்கு **யாகம்** என்று பொருள். இந்நூலில் பாதிக்கு மேற்பட்ட பகுதிகள் உரைநடையில் அமைந்துள்ளன.
- இவ்வடிப்படையில் **சமஸ்கிருதத்தின் முதல் உரைநடை என்று** இவ்வேதம் அழைக்கப்படுகிறது.
- மிகச் சிறப்பு வாய்ந்த ருத்ரம் (செய்யுள்) இதில் இடம் பெற்றுள்ளது. வேள்வி செய்யும் முறை, அசுவமேதயாகம், இராஜசூய யாகம், சமயச் சடங்குகள் ஆகியவை பற்றியும் இவ்வேதம் கூறுகிறது.
- இவ்வேதம் நடைமுறை சடங்குகள் மற்றும் வேள்விக்கான பாடல்களைக் கொண்டுள்ளது. இது **சுக்ல யஜுர்வேதம், கிருஷ்ண யஜுர்வேதம்** என்ற **இரு பிரிவுகளையும் நாற்பது அத்தியாயங்களையும்** கொண்டுள்ளது.

## சாமவேதம் :

- **சாமம் என்ற இன்னிசை அடிப்படையில்** பாடப்பெற்றதால் **இவ்வேதம், சாமவேதம்** என்றழைக்கப்படுகிறது. இசை, தெய்வம், சோமயாகம் ஆகியவை பற்றிக் கூறுகிறது.
- இசை வடிவிலான வேதமந்திரங்களைக் கூறுகிறது. ஆரியர்களின் இசையார்வத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இவ்வேதம் திகழ்கிறது. இதில் **1549 பாடல்கள் உள்ளன.**

## அதர்வண வேதம் :

- இவ்வேதத்தில் உச்சாடனம், மாந்திரீகம் போன்றவற்றால் தீய சக்திகளை வெல்லலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- வேதகால மருத்துவமுறைகள் பற்றிய கருத்துகளும் இவ்வேதத்தில் உள்ளன.
- மந்திரம் உச்சரிக்க வேண்டிய முறைகள் பற்றிய பாடல்களும் இவ்வேதத்தில் உள்ளன.
- இவ்வேதத்தில் **20 பகுதிகளும் 731 பாடல்களும் உள்ளன. இது பிரம்மவேதம் என்றும் அழைக்கப்படுகிறது.**

## பிராமணங்கள் :

- வேதங்களுக்கான விளக்க உரைகளே பிராமணங்கள் எனப்படுகின்றன.
- ஆரியர்கள் வேள்விச் சடங்குகள் செய்யும் முறைகளையும் வழிபாட்டு முறைகளையும் அவற்றிற்கான விளக்கங்களையும் பிராமணங்கள் குறிப்பிடுகின்றன.
- வேதங்களை ஓதுபவர்களின் கடமைகளையும் பிராமணங்கள் குறிப்பிடுகின்றன. இவை வேதங்களிலுள்ள துதிப்பாடல்களுக்குரிய உரைநடை நூல்கள் எனப்படுகின்றன.

## ஆரண்யகங்கள் :

- ஆரண்யம் என்ற சொல்லிற்குக் காடு என்று பொருள். காடுகளில் இறையருள் தேடித் தவம் செய்த முனிவர்களால் எழுதப்பட்ட இலக்கியங்கள் ஆரண்யகங்கள் எனப்படுகின்றன.
- வேள்வியைவிட அமைதியான தியானமே. மிகவும் மேலானது என்று ஆரண்யகங்கள் வலியுறுத்துகின்றன.
- அநுபூதி நெறிகள் மற்றும் தத்துவக் கருத்துகள் அடங்கிய கருத்துப்பெட்டகம் என்று ஆரண்யகங்கள் அழைக்கப்படுகின்றன. வேதகாலப் பண்பாட்டின் உன்னத நிலையை இவை எடுத்துக்காட்டுகின்றன.

## உபநிடதங்கள் :

- வேதங்களின் சாரமே உபநிடதம் என்று அழைக்கப்படுகிறது. **உபநிடதம் (உபநிஷத்)** என்ற சொல்லிற்கு **அருகில் அமர்ந்து கேட்டல்** என்று பொருள் ஆகும்.
- பிரம்மச்சாரியான மாணவன் தன் குருவின் அருகில் பயபக்தியுடன் அமர்ந்து அறிவைப் பெற வேண்டுமென்பதையே இது வலியுறுத்துகிறது.
- உபநிடதங்கள், கடவுள், ஆன்மா, உலகம், கர்மவினை, வீடுபேறு போன்ற கருத்துகளை ஆராய்ந்து தெளிவான விளக்கங்களை உலகிற்கு அளிக்கின்றது.

# 04 சமணம் (ம) பௌத்தம்

## சமணம்

- ✶ இந்தியாவின் பழம்பெரும் சமயங்களுள் சமண சமயமும் ஒன்றாகும்.
- ✶ இருபத்தி நான்கு தீர்த்தங்கரர்களின் போதனைத் தொகுப்பே சமணமாகும்.
- ✶ **சமண மதம், ஜைன மதம், அருக மதம், பிண்டி மதம், நிகண்ட மதம்** என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.
- ✶ ஜீனரின் வழி செல்பவர்களால் **ஜைனர் - சமணர் எனப்பட்டனர். ஜீன் என்பது ஜீத் என்ற பகுதியின் அடியாகப் பிறந்தது.**
- ✶ ஜீத் என்பதற்கு ஜெயித்தல், வெற்றிபெறுதல் என்று பொருள். **ஜீனர் என்றால் புலன்களை வெற்றி கண்டவர்.**
- ✶ **நோக்கம் :** வினைப் பயனிலிருந்து விடுதலை பெற்று, நற்கதி அடைவதே சமணத்தின் முக்கிய நோக்கமாகும்.

> சமணம் என்னும் சொல் **ஜினா** என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும்.
> அதன் பொருள் **தன்னையும், வெளியுலகத்தையும்** வெல்வது என்பதாகும்.

## தீர்த்தங்கரர்கள் :

- ✶ **தீர்த்தங்கரர்** என்ற சொல்லிற்குப் **பிறவிப் பெருங்கடலைக் கடந்த ஞானி** என்று பொருள் ஆகும்.
- ✶ முதலாவது தீர்த்தங்கரர் **ரிஷபர்** என்பவராவார்.
- ✶ 23 ஆவது தீர்த்தங்கரரான **பார்சவநாதர் பற்றியும் 24 ஆவது தீர்த்தங்கரரான வர்த்தமானர்** என்ற மகாவீரர் பற்றியும் அறிய முடிகிறது.

TAF IAS ACADEMY

## வர்த்தமான மகாவீரர் :



- ✶ பிறப்பு : வைசாலிக்கு அருகேயுள்ள **குந்தகிராமம்** (பீகார்)
- ✶ இயற்பெயர்: **வர்த்தமானர்.**
- ✶ பெற்றோர் : சித்தார்த்தர், திரிசலா (லிச்சாவி இளவரசி)
- ✶ மனைவி : **யசோதா**
- ✶ மகள் : **அனோஜா பிரியதர்ஷனா**
- ✶ இவரே சமண சமயத்தின் கடைசி தீர்த்தங்கரர் ஆவார்.
- ✶ பன்னிரண்டு ஆண்டுகள் கடந்து பதின்மூன்றாவது ஆண்டில் தன்னுடைய 42 வயதில் **ரிஜீபாலிகா** என்னும்இடத்தில் சால் மரத்தினடியில் **கைவல்யா** எனப்படும் உயரிய ஆன்மீக ஞானத்தை அடைந்தார்.
- ✶ மகாவீரர் 30 ஆண்டுகள் மக்களுக்கு உபதேசம் செய்தார்.
- ✶ வர்த்தமானர் **(செழிப்பு என்று பொருள்)** ஒரு சத்திரிய இளவரசர்.
- ✶ இருந்தபோதிலும் அவர் தன்னுடைய 30வது வயதில் இளவரசர் என்னும் தகுதியைக் கைவிட்டுவிட்டு துறவறம் மேற்கொண்டார். தீரமாள தியானத்தை மேற்கொண்டார்.
- ✶ அதன் பின்னர் அவர் ஜீனர் ஆனார். **ஜீனர் என்றால் ஆன்மாவை வென்றவர்** என்பவராவர் இவரைப் பின்பற்றியவர்கள் சமணர் என்று அழைக்கப்பட்டனர்.
- ✶ மகாவீரர் பண்டைய சிரமானிய மரபுகளை மறு ஆய்வு செய்தார். அவற்றின் அடிப்படையில் புதிய கோட்பாடுகளை உருவாக்கினார்.
- ✶ ஆகவே இவர்தான் உண்மையிலேயே சமணத்தை உருவாக்கியவர் என நம்பப்படுகிறது.
- ✶ இறப்பு : **பவபுரி (பீகார்)**

# 05 மௌரியர்கள்

## 5.1 மௌரியருக்கு முந்தைய இந்தியா

**அறிமுகம் :**

- **பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து** மூன்றாம் நூற்றாண்டு வரை வட இந்தியா பல முக்கியமான அரசியல், சமூக மாற்றங்களை எதிர்கொண்டது.
- புத்தரின் சமகாலத்தவரான **பிம்பிசாரர்** பேரரசை நிர்மாணிக்கும் பணியைத் தொடங்கினார்.
- அதன் பிறகு அவரது புதல்வர் **அஜாதசத்ருவாலும்,** பின்னர் **நந்தர்களாலும்** மேலும் வலுவாக்கப்பட்டது.
- **சந்திரகுப்த மௌரியர்** உருவாக்கிய மௌரிய வம்சத்தின் தோற்றத்தோடு, இந்தப் பேரரசு தனது புகழின் உச்சத்தை அடைந்தது.
- முதல் மூன்று மௌரிய அரசர்களான **சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர்** ஆகியோர் நன்கு அறியப்பட்ட மௌரிய அரசர்கள் ஆவர்.
- அசோகருக்குப் பிறகு மௌரியப் பேரரசு மெல்ல மெல்ல வீழ்ச்சி அடைந்தது.

**சான்றுகள் :**

- இலங்கையில் கிடைத்த, **பாலி மொழி நூலான மகாவம்சம்** என்ற வரலாற்றோடு ஒரு முக்கியமான கூடுதல் ஆதாரம் ஆகும்.
- இந்த ஆதாரங்கள் மூலம் துண்டுதுண்டாகக் கிடைக்கும் தகவல்கள் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் **அலெக்சாண்டர் படையெடுத்ததைத்** தொடர்ந்து, இந்தியா பற்றி எழுதிய கிரேக்க வரலாற்று அறிஞர்களின் பதிவுகளால் உறுதி செய்யப்பட்டன.
- **1837இல் ஜேம்ஸ் பிரின்செப் சாஞ்சியில்** உள்ள கல்வெட்டு ஒன்றில் இருந்த பிராமி எழுத்துகளின் பொருளைக் கண்டுபிடித்த பிறகு தான் மௌரிய காலகட்டத்தை மறுஉருவாக்கம் செய்வது பெரிய அளவிற்கு சாத்தியப்பட்டது.
- இருபதாம் நூற்றாண்டில் தொல்லியல் அகழ்வாய்வுகள் மூலம் சிந்து வெளி நகரங்களான **ஹரப்பா, மொஹஞ்சதாரோ** ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் வரை பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான தொல்லியல் பொருள் இவைதான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.
- **முதலாவது குஜராத்தில் உள்ள கிர்நார்** என்ற இடத்திற்கு அருகில் உள்ள **ஜீனாகத்தில்** உள்ள பாறைக் கல்வெட்டு.
- இது பேரரசர் சந்திரகுப்தரின் மாகாண அரசப்பிரதிநிதி (ராஷ்ட்ரியா) **புஷ்யகுப்தர்** பற்றிக் குறிப்பிடுகிறது.
- அது **விசாகதத்தரின் முத்ரராாட்சசம்** என்ற நாடகம் பொ.ஆ. நான்காம் நூற்றாண்டிற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு, குப்தர்கள் காலத்தில் எழுதப்பட்டது.
- சந்திரகுப்தருக்கு எதிரான படையெடுப்பைத் தடுக்க அவரது தலைமை ஆலோசகர் **சாணக்கியர்** அல்லது **கௌடில்யர்** தீட்டிய யுக்திகளைப் பட்டியலிடுகிறது.

**ஹரியங்கா வம்சம்**

**மகதத்தின் எழுச்சி :**

- **16 மகாஜனபதங்களின்** தொடக்ககாலத்தில் காசி சக்திவாய்ந்ததாக இருந்தது.
- எனினும் பின்னர் கோசலம் ஆதிக்கம் செலுத்தியது.
- **மகதம், கோசலம், விர்ஜ்ஜி, அவந்தி** ஆகியவற்றிற்கிடையே ஒரு அதிகாரப் போராட்டம் தொடங்கி, இறுதியில் மகதம் ஆதிக்கம் செலுத்தும் மகாஜனபதமாக உருவாகி, முதல் இந்தியப் பேரரசை அமைத்தது.

**பிம்பிசாரர் :**


பிம்பிசாரர்

- **ஹரியங்கா** வம்சத்தின் **பிம்பிசாரர்** மகதத்தின் முதல் அரசராக அறியப்படுகிறார்.
- இவர்களுடைய தலைநகரங்களாக முதலில் **சிராஸ்வதியும்** பின்னர் **இராஜகிருகமும்** இறுதியாக பாடலிபுத்திரமும் விளங்கியது.
- சமண இலக்கியங்கள் பிம்பிசாரரை **"ஸ்ரேணிகா"** என்று குறிப்பிடுகின்றன.

**அஜாதசத்ரு :**

- அஜாதசத்ரு, தந்தை பிம்பிசாரரைக் கொன்றுவிட்டு ஆட்சிக்கு வந்தார்.
- அஜாதசத்ரு **பாடலிபுத்திரம்** என்ற நகரை நிறுவினார்.
- அஜாதசத்ரு லிச்சாவியரையும் மல்லர்களையும் வென்றார்.
- அஜாதசத்ருவும் புத்தரைச் சந்தித்திருப்பதாக நம்பப்படுகிறது.
- **பொ.ஆ.மு. 461இல் அஜாதசத்ரு மறைந்த போது மகதம் அசைக்க முடியாத வலுவான அரசாகிவிட்டது.**
- புத்தர் மகா பரிநிர்வாண நிலையை அடைந்த பிறகு இராஜகிருகத்தில் முதல் புத்த மதமாநாட்டைக் கூட்டினார்.

**சிசுநாகவம்சம் :**

- ஹரியங்கா வம்சத்தைத் தொடர்ந்து **சிசுநாக வம்சம்** வந்தது.
- வாரணாசியின் அரசப்பிரதிநிதி **சிசநாகர்** என்பவர் ஹரியங்கா அரசரைக் கொன்று அரியணை ஏறினார்.
- சிசுநாகர்கள் ஐம்பதாண்டுக் காலம் ஆட்சி செய்தனர்.
- இவ்வம்சத்தைச் சேர்ந்த **காலசோகா** தலைநகரத்தை **ராஜகிரகத்திலிருந்து பாடலிபுத்திரத்திற்கு** மாற்றினார்.
- **காலசோகா இரண்டாம் பௌத்த சமய மாநாட்டை வைசாலியில் கூட்டினார்.**

**நந்தர்கள்**

**நந்தர்கள் : இந்தியாவில் முதல் பேரரசை உருவாக்கியவர்கள்**

- அஜாதசத்ரு மறைந்து சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு **பொ.ஆ.மு. 362இல்** நந்தர்கள் மகதப் பேரரசின் அரசர்களானார்கள்.
- **நந்தர்களே** இந்தியாவில் **முதன் முதலாக பேரரசை** உருவாக்கியவர்கள் ஆவர்.
- முதல் நந்த அரசர் **மஹாபத்மா** ஆவார். இவர் **ஏக்ரன்** என்னும் பெருமை மிகு பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்.
- இவர் சிசுநாக அரசரைக் கொன்று அரியணையைக் கைப்பற்றியதாக நம்பப்படுகிறது.
- நந்தர்களின் கீழ் பேரரசு நன்கு விரிவடைந்தது.
- நந்தர்களின் செல்வமும் அதிகாரமும் பரவலாக இருந்தன.
- மஹாபத்ம நந்தரைத் தொடர்ந்து அவருடைய எட்டு புதல்வர்கள் ஆட்சி செய்தார்கள்.
- இவர்கள் அனைவரும் சேர்ந்து நவநந்தர்கள் என்றழைக்கப்படுகிறார்கள்.
- கடைசி நந்த அரசரான **தனநந்தர்** சந்திர குப்த மௌரியரால் வெற்றிக் கொள்ளப்பட்டார்.
- தனநந்தர் காலத்தில் தான் **அலெக்ஸாண்டர்** இந்தியாவின் மீது படையெடுத்தார்.
- தனநந்தர் **"அக்ரசேனர்"** என்றும் அழைக்கப்படுகிறார்.
- பேரரசை விரிவாக்கும் பணியில் நந்தர்கள் பல சத்திரிய இனக்குழுக்களை அழித்தார்கள்.
- ஓரளவு சுயேச்சையான அதிகாரம் கொண்டிருந்த சத்திரியர்களால் ஆளப்பட்ட அரசுகளையும் அடிமைப்படுத்தினார்கள்.
- இவ்வாறாக, ஒரு சர்வாதிகாரமான, மையப்படுத்தப்பட்ட அரசை உருவாக்கினார்கள்.
- ஒடிசாவின் புவனேஷ்வருக்கு அருகிலுள்ள உதயகிரியில் காணப்படும் **ஹதிகும்பா (யானைக்குகை) கல்வெட்டு** முந்நூறு வருடங்களுக்கு முன் அரசர் நந்தர் வெட்டிய நீர்வடிகாலைப் பற்றிக் குறிப்பிடுகிறது.
- இது நந்த அரசு எந்த அளவிற்குப் பரவியிருந்தது என்பதைக் காட்டுகிறது.

# 06 குப்தர்கள் மற்றும் நிர்வாகம்

## குப்தப் பேரரசு :

- குஷாணப் பேரரசின் வீழ்ச்சிக்கு பிறகு மகதத்தில் **பாடலிபுத்திரத்தை** தலைநகராகக் கொண்டு உருவான பேரரசு குப்தப் பேரரசு ஆகும். இவர்கள் **பொ.ஆ 300 - பொ.ஆ 700** வரை ஆட்சிபுரிந்தனர்.
- மௌரிய பேரரசிற்கு பின்னர் பல பெரிய (ம) சிறிய அரசுகள் தோன்றினாலும் குப்த பேரரசு தான் மத்தியில் ஒரு வலுவான அரசாக வலுப்பெற்று துணைக் கண்டத்தின் பெரிய பகுதிகளை அரசியல் ரீதியாக ஒன்றிணைத்தது. நிலப்பிரபுத்துவம் ஒரு நிறுவனமாக வேரூன்றித் தொடங்கியது.
- **சமஸ்கிருத்தில்** பல பெரிய படைப்புகள் தோன்றின. குப்தர்காலம் **பொற்காலம், பண்பாட்டு மறுமலர்ச்சியின் காலம்** (ம) **செவ்வியல் கலைகளின் காலம்** என அழைக்கப்படுகிறது.
- குப்தர் காலத்து வரலாற்றறை மீள் உருவாக்கம் செய்ய 3 வகையான சான்றுகள் உள்ளன.
- குப்தர்களின் **சின்னம் கருடன்** ஆகும். இவர்களுடைய **அரசவை மொழியாக சமஸ்கிருதம்** விளங்கியது.
- குப்தர்களின் எழுத்துமுறையை கண்டுபிடிக்க தூண்டுகோலாக இருந்தவர் **சார்லஸ் வில்கின்ஸ்** ஆவர்.
  - இலக்கியச் சான்றுகள்
  - கல்வெட்டுச் சான்றுகள்
  - நாணய ஆதாரங்கள்.
- தலைநகரம் - **பாடலிபுத்திரம்** ஆகும். **இரண்டாம் சந்திரகுப்தர்** தலைநகரை **உஜ்ஜையினிக்கு** மாற்றினார்.

> கிரேக்க வரலாற்றில் **பெரிக்ளியன் காலம்** எந்த அளவிற்கு முக்கியமோ அதே அளவிற்கு **குப்தர்கள் காலம்** முக்கியத்துவம் வாய்ந்தது - **பார்னெட்**

## இலக்கிய சான்றுகள் :

- புராணங்கள் - விஷ்ணு, மத்சய, வாயு, பாகவத புராணம்
- **நாரதர் - நீதி சாஸ்திரம்**
- **விசாகதத்தர் - முத்ரா ராட்சசம் (தண்டனைகள் நிறைவேற்றும் முறைகள்), தேவி சந்திரகுப்தம் (கதாநாயகன் - 2ம் சந்திரகுப்தர்)**
- **பாணர்- ஹர்ஷசரிதம்**
- காளிதாசர் படைப்புகள் - சாகுந்தலம், விக்கிரம ஊர்வசியம், மாளவிகாக்னி மித்ரம், ரகுவம்சம், மேகதூதம், ரிதுசம்காரம்
- **பாகியான் - போகௌகி (போகோகி)**
- **யுவான் சுவாங் - சி - யூ - கி**
- காமந்தகார் - நீதிச்சாரம் (எ) தரும சாத்திரம்

## கல்வெட்டுச் சான்றுகள் :

- சமுத்திர குப்தர் - அலகாபாத் தூண் கல்வெட்டு, கயா செப்பேடு, ஈரான் தூண் கல்வெட்டு.
- இரண்டாம் சந்திரகுப்தர் - **மெக்ராலி இரும்புத் தூண் கல்வெட்டு, உதயகிரி குகைக் கல்வெட்டு, மதுரா பாறைக் கல்வெட்டு, சாஞ்சிப் பாறைக் கல்வெட்டு.**
- கத்வா பாறைக் கல்வெட்டு (இரண்டாம் சந்திரகுப்தர்(ம)குமாரகுப்தர் பற்றி குறிப்பிடுகிறது).
- **ஸ்கந்த குப்தர் - பிதாரி தூண் கல்வெட்டு**
- நாளந்தா களிமண் முத்தரை பொறிப்பு.



மெஹ்ரோலி இரும்புத் தூண்

**அலகாபாத் தூண் கல்வெட்டு**

- **சமுத்திர குப்தரின் போர்** வெற்றிகள் பற்றி குறிப்பிடுகிறது.
- இதனை சமுத்திரகுப்தரின் அமைச்சரான **ஹரிசேனர்** என்பவர் எழுதினார்.
- இக்கல்வெட்டானது **நாகரி வரி** வடிவத்தில் **33 வரிகளையும், 4 பகுதிகளையும்** கொண்டது.
- இக்கல்வெட்டானது சமுத்திர குப்தரை **"புருஷா"** என்று குறிப்பிடுகிறது. இதன் பொருள் **"அனைவருக்கும் மேலானவர்"** என்பதாகும்.
- சமுத்திர குப்தரின் படையெடுப்பு **4 பிரிவுகளாக** பிரிக்கப்பட்டுள்ளது.
- சபா என்ற அமைச்சர் குழுவை பற்றிய செய்தியும் காணப்படுகிறது.

## நாணயச் சான்றுகள் :

- குப்த அரசர்களால் வெளியிடப்பட்ட **தங்க, வெள்ளி, செப்பு** நாணயங்கள்.
- இந்த நாணயங்களில் அரசர்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.
- இந்த தங்க நாணயங்கள் அரசர்களின் பட்டங்கள் குறித்தும் அவர்கள் நடத்திய வேள்விகள் குறித்தும் கூறுகின்றன.
- தங்க நாணயம் **தினாரா** என்று அழைக்கப்படுகிறது.

## ஸ்ரீ குப்தர் (பொ.ஆ. 240 - 280) :

- குப்த வம்சத்தை **ஸ்ரீ குப்தர்** தோற்றுவித்தார்.
- **பூனா செப்பேடு** இவரை பற்றி குறிப்பிடுகிறது.
- ஸ்ரீ குப்தரைத் தொடர்ந்து அவரது மகன் **கடோத்கஜர்.** (பொ.ஆ. 280 - 319) ஆட்சிக்கு வந்தார்.
- கல்வெட்டுகளில் ஸ்ரீ குப்தர் (ம) கடோத்கஜர் ஆகிய இருவரும் **மகாராஜா** என்று குறிக்கப்படுகிறார்கள்.
- ஸ்ரீ குப்தர் தற்போதைய வங்காளம், பீகார் போன்ற பகுதிகளை ஆண்டதாக கருதப்படுகிறது.
- **நாணயங்களில் முதன் முதலாக இடம்பெற்ற குப்த அரசரின் வடிவம்** ஸ்ரீ குப்தர் வடிவம் ஆகும்.

## முதலாம் சந்திர குப்தர் : (கி.பி 319 - 335)

- கி.பி. 320 ல் குப்த சகாப்தம் தொடங்கியது.
- இவர் கடோத்கஜரின் புதல்வர் ஆவார்.
- குப்தப் பேரரசின் **முதல் பேரரசராகக்** கருதப்படுகிறார்.
- **வஜிகா** என்பவர் எழுதிய **கௌமுதி மகோத்சவ நாடக** நூலானது இவர் முடி சூடியதை பற்றி குறிப்பிடுகிறது.
- குப்தப் பேரரசின் **முதல் சுதந்திர மன்னராக** கருதப்படுகிறார்.
- சந்திர குப்தர் **மகாராஜா - அதிராஜா** என்ற பட்டத்தை ஏற்றார்.
- இவரது காலத்தின் கல்வெட்டோ, நாணயமோ நமக்கு கிடைக்கவில்லை.
- **லிச்சாவி இளவரசி குமாரதேவியை** மணந்தார்.
- சந்திர குப்தர்தளால் வெளியிடப்பட்ட தங்க நாணயங்களில் சந்திர குப்தர் (ம) குமாரதேவி ஆகிய இருவரின் உருவங்களும் பொறிக்கப்பட்டு **லிச்சாவையா** என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது.
- குப்தயுகம் என்ற காலக் கணக்கு இவரது ஆட்சிகாலத்திலிருந்து (319 - 320) தொடங்குகிறது.
- நாணயத்தில் உருவம் பொறிக்கப்பட்ட முதல் இந்திய அரசி லிச்சாவி அரசியான **குமாரதேவி** ஆவார்.
- **லிச்சாவி** என்பது வடக்கு **பீகாரில்** இருந்த பழமையான **கணசங்கமாகும்.** இது கங்கைக்கும் நேபாள தெராய்க்கும் இடைப்பட்ட பகுதியாகும்.

# 08 டெல்லி சுல்தான்கள்

## 8.1 அரேபியர் (ம) துருக்கியர் படையெடுப்பு

### அரேபியர் படையெடுப்பு

### இஸ்லாமின் தோற்றம் :

- இஸ்லாம் அரேபியாவிலுள்ள **மெக்காவில்** தோன்றியது.
- இஸ்லாமை தோற்றுவித்தவர் - இறைதூதர் **முகமது நபிகள்** நாயகமாவார்.
- இஸ்லாமை பின்பற்றுபவர்கள் **முஸ்லீம்கள்** என அழைக்கப்படுகின்றனர்.
- ஓர் இஸ்லாமிய அரசு அரசியல் ரீதியாகவும் மத ரீதியாகவும் ஒரே நபரால் ஆளப்பட்டால் அவ்வரசு **கலீஃபத்** என்று அழைக்கப்பட்டது.
- கலீஃபா என்ற சொல்லின் பொருள் **இறைதூதர் முகமது நபிகளின் பிரதிநிதி** ஆவார்.
- தொடக்க கால கலீஃபத்துகள் **உமையதுகள், அப்பாசித்துகள்** ஆவார்.
- அரேபியர்கள் தான் முதன்முதலில் இஸ்லாம் மதத்தை பின்பற்றியவர்கள் ஆவர்.
- இஸ்லாமியர்களை வலிமை மிக்க அரசியல் இயக்கமாக ஆசியாவில் நிலை நிறுத்தியவர்களும் **அரேபியர்களே** ஆவர். (அரேபியர்களை தொடர்ந்து இஸ்லாம் மதத்தை வலிமையுடன் வளர செய்தவர்கள் **பாரசீகர்கள்**).
- முகமது நபி **பொ.ஆ. 622 - ல்** மதினாவுக்குச் சென்றார்.
- பொ.ஆ. 622 லிருந்து முஸ்லீம் சகாப்தமான **ஹிஜிரா** தொடங்குகிறது; முஸ்லீம் நாள்காட்டியும் தொடங்குகிறது.
- 8 ஆண்டுகளுக்கு பிறகு முகமது நபி சீடர்களுடன் மெக்காவிற்குத் திரும்பினர்.
- பொ.ஆ. 632-ல் முகமது நபி மறைந்தார்.

TAF IAS ACADEMY

### இந்தியா மீது அரேபியர்கள் படையெடுப்பு

### சிந்து பகுதி மீது அரேபியர் படையெடுக்க காரணம் :

- ஈராக்கின் அரபு ஆளுநர் **ஹஜஜ் - பின் - யூசுஃப்** கடற்கொள்ளையருக்கு எதிரான நடவடிக்கை என்ற காரணம் காட்டி சிந்து அரசர் தாகிரை எதிர்த்து தரைவழி, கடல்வழி என இரு படைப்பிரிவுகளை அனுப்பினார்.
- இந்த இரண்டு படைப்பிரிவுகளும் தாகிரிடம் தோல்வியுற்று அதன் தளபதிகள் கொல்லப்பட்டனர்.
- **சான்று** - அரேபியர் சிந்து பகுதியின் மீது படையெடுத்ததற்கான சான்றாக **சச்நாமா** என்ற அரேபிய மொழி நூல் மட்டுமே உள்ளது.

### முகமது பின் காசிம் படையெடுப்பு (பொ.ஆ 712) :

- ஹஜஜ் பின் யூசுஃப் கலிபா வாலித் அனுமதியுடன் 17 **வயது** நிரம்பிய தனது மருமகன் முகமது பின் காசிம் தலைமையில் ஒரு வலிமையான படையை சிந்து மீது படையெடுக்க **பொ.ஆ.** 712- இல் அனுப்பினார்.
- முகமது பின் காசிம் படை மிக பெரியதாக இருந்தது. அவை முறையே
  - 6000 சிரிய நாட்டுக் குதிரைகள்
  - 6000 ஒட்டகங்கள்
  - 3000 பாக்டீரிய நாட்டு ஒட்டகங்கள்
  - 2000 காலாட்படை
  - 5 பாறைகளை தூக்கி எறியும் இயந்திரம் மற்றும் 25000 வீரர்கள்

✶ இந்தியாவின் மீது படையெடுத்த முதல் முஸ்லீம் உமையது அரசின் படைத்தளபதி **முகமது பின் காசிம்.**
✶ அவர் இந்தியாவில் கைப்பற்றிய முதல் பகுதி **பிராமணாபாத்** ஆகும். பிராமணாபாத் பகுதி சிந்து அரசர் தாகிரின் கட்டுபாட்டில் இருந்தது.
✶ **ரோஹ்பூரியில்** நடந்த போரில் **தாகிர் முகமது பின் காசிம்** ஆல் கொல்லப்பட்டார்.

**பிராமணாபாத்**

♣ பிராமணர்கள் அதிகம் வாழ்ந்தனர்.
♣ தாகிரின் முன்னோர்கள் இப்பகுதியை பௌத்த அரச வம்சத்திலிருந்து கைப்பற்றி ஆட்சி நடத்தி வந்தனர்.
♣ இராணுவம் மற்றும் நிர்வாகம் போன்ற உயர் பதவிகளில் பிராமணர்களே இருந்தனர். இதனால் இந்நகரம் **பிராமணாபாத்** எனப்பட்டது.

✶ அதன் பிறகு காசிமின் படை சிந்துவின் **தேபல் துறைமுகத்தை** அழித்து **3 நாட்கள்** கொள்ளையடித்தது.
✶ சிந்துவின் **தலைநகரம் அரோர்** கைப்பற்றப்பட்டது. பின் முல்தானையும் முகமது பின் காசிம் கைப்பற்றினார்.
✶ **முல்தானில்** அதிக செல்வ வளங்களை காசிம் கைப்பற்றியதால் அதனை **தங்க நகரம்** என அழைத்தார்.
✶ சிந்து பகுதி மக்களை சரணடையமாறு கேட்டுக்கொண்ட காசிம் அவர்களை அவர்களின் மதத்தை பின்பற்றுவதற்கு முழு பாதுகாப்பு தருவதாகவும் வாக்களித்தார்.
✶ சிந்து பகுதியில் வாழ்ந்த இந்து மக்களுக்கு **சிம்மிக்கள்** எனப்படும் பாதுகாக்கப்படும் மக்கள் என்ற இரண்டாந்தர அந்தஸ்து வழங்கப்பட்டது.
✶ முகமது பின் காசிம் தான் கொள்கை அடித்ததில் 5ல் 1 பங்கை கலீஃபாவிற்கு அனுப்பினார். எஞ்சியதை படைவீரர்களுக்கு பிரித்து கொடுத்தார்.
✶ முகமது பின் காசிம் சிந்துவில் நிர்வாக ஏற்பாடுகளை செய்தார்.





**வீரப்பெண்களின் தற்காப்பு ( ஜவ்ஹர் முறை)**

✶ சிந்துவின் மன்னர் தாகிர் தோற்றதால் **ரேவார் (அரோர்)** கோட்டைக்குள் இருந்த அவரது மனைவி இராணிபாய் மற்றும் அரண்மனை பெண்களும் தற்காப்புப் போரில் ஈடுபட்டனர்.
✶ அது தோல்வியடையவே **ஜவ்ஹர்** என்ற வழக்கப்படி எதிரியிடம் அகப்படாமல் இருக்க தீயை மூட்டி அதில் குதித்து உயிர் துறந்தனர்.

# 09 விஜயநகர (ம) பாமினி அரசுகள்

**விஜய நகரப் பேரரசு (1336- 1646)**

**விஜய நகர பேரரசு நிறுவப்படுதல் :**



ஹரிஹரர், புக்கர்

- 14 - ஆம் நூற்றாண்டில் டெல்லி சுல்தானியத்தில் நிலவிய அரசியல் சூழல் தென்பகுதிகளில் பல புதிய அரசுகள் உதயமாக வாய்ப்புகளை அளித்தது.
- முகமது பின் துக்ளக்கின் அடக்கு முறை நடவடிக்கைகள் புதிய சுதந்திர அரசுகள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது.
- விசுய நகர பேரரசின் உருவாக்கம் தொடர்பாக பல மரபு சார்ந்த செய்திகள் உள்ளன.
- அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான கருத்தாக **கி.பி. 1336 ஆம்** ஆண்டு சங்கம வம்ச சகோதரர்களான **ஹரிஹரர்,** புக்கர் ஆகியோரால் துங்கபத்ரா நதிக்கரையில் விஜயநகரை தலைநகராகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது.
- இந்நிகழ்வு ஹொய்சாள அரசர் **3-ம் பல்லாலர்** மதுரை சுல்தானால் கொல்லப்பட்ட பின்னர் நடைப்பெற்றது.
- தொடக்கத்தில் துங்கபத்திரை நதியின் வடக்கு கரையில் அனகொண்டி அருகே தலைநகர் அமைந்திருந்தது.
- ஆனால் தலைநகரானது விரைவில் ஆற்றின் தென்கரையில் அமைந்திருந்த ஹொய்சாள நகரமான **ஹொசபட்னா (ஹம்பிக்கு** அருகே) என்னும் இடத்திற்கு மாற்றப்பட்டது.
- ஹொசபட்னா நகரமானது விரிவுப்படுத்தப்பட்ட பின்னர் வித்யாநகர் என்றும் பின்பு **விஜயநகரம் (வெற்றியின் நகரம்)** என மாற்றப்பட்டது.
- துக்ளக் அரசரிடம் பணியாற்றிய இவர்களை சைவத்துறவியும், சிருங்கேரி சைவ மடத்தின் தலைவரும், சமஸ்கிருத அறிஞருமான மாதவ **வித்யாரண்யரின்** அறிவுறுத்தலுக்கு இணங்க ஹரிஹரரும் புக்கரும் முஸ்லீம் மதத்தலிருந்து மீண்டும் இந்துக்களாக மாறினர்.
- விஜய நகர அரசு நான்கு அரச வம்ச அரசர்களால் ஆளப்பட்டது.
    - **சங்கம் வம்சம்** (1336 - 1485)
    - **சாளுவ வம்சம்** (1485- 1505)
    - **துளுவ வம்சம்** (1505 - 1570)
    - **ஆரவீடு வம்சம்** (1570- 1646)

**விஜயநகர அரசு பற்றிய வரலாற்று சான்றுகள் / ஆதாரங்கள் :**

- **ராஜநத்தா தின்டிமா** எழுதிய **சாளுவபையுதயம், அல்லாசானி பெத்தண்ணாவின் மனுசரிதம்** போன்ற நூல்கள் விஜயநகர அரசின் வம்வாவளி, அரசியல் மற்றும் சமூகம் பற்றிய தகவல்களை தருகின்றன.
- **ராயவாசகமு** என்ற தெலுங்கு இலக்கியம் கிருஷ்ண தேவராயரின் கீழ் இருந்த நாயக்க முறை பற்றிய தகவல்களை தருகின்றது.
- அயல்நாட்டு பயணிகளின் குறிப்புகள்.

- இபன்பதூதா - மொராக்கோ
- அப்துர்ரசாக் - பாரசீகம்
- நிகிடின் - ரஷ்யா
- டோமிங்கோபயஸ் - போர்ச்சுக்கள்
- நூனிஸ் - இத்தாலி
- நிக்கோலோ டி கோண்டி - வெனிசு



**கிருஷ்ணதேவராயர் - தங்க நாணயம்**

- தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளிலுள்ள கல்வெட்டுகள், சமஸ்கிருத மொழி செப்பு பட்டயங்களும் இலக்கியங்களும் சான்றுகளாக உள்ளன.
- விஜயநகர **அரசின் முத்திரை - பன்றி (வராகம்). (சாளுக்கியரின் அரச முத்திரையாகவும் உள்ளது.)**

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமான **தலைக்கோட்டைப் போரின் (1565)** போது முகலாயப் பேரரசை **மாமன்னர் அக்பர்** ஆட்சி செய்து கொண்டு இருந்தார்.

- **<u>நாணய சான்றுகள்:</u>**
  - விஜய நகர அரசின் தங்க நாணயம் - **வராகன்.**
  - இது **தமிழில் பொன்** எனவும், **கன்னடத்தில் ஹொன்னு** எனவும் குறிப்பிடப்பட்டது.
  - இந்த நாணயத்தில் இந்து தெய்வங்களின் உருவங்களும், காளை, யானை, **கண்டபெருண்டா** போன்ற விலங்குகளின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. **(கண்ட பெருண்டா - இரட்டை கழுகு வடிவத்தில்** உள்ள கற்பனை பறவை. இது தனது அலகிலும் நகத்திலும் யானையைக் கொத்திக் கொண்டிருப்பதாக காணப்படும்).
  - நாணயத்தில் அரசனுடைய பெயர் நகரி அல்லது கன்னட எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.
  - **பக்கோடா என்ற நாணயமும் பயன்பாட்டில் இருந்தது.**
- விஜயநகர அரசு உருவான 40 ஆண்டுகளுக்கு உள்ளாகவே குறுகிய அரசு நிலையிலிருந்து பேரரசாக மாறியது.

- 14ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தக்காணம் மற்றும் தென்னிந்திய பகுதிகள் **நான்கு அரசுகளாகப்** பிரிக்கப்பட்டிருந்தன. அவை:
- **தேவகிரியின் யாதவர் (மேற்குத் தக்காணம்/தற்போதைய மகாராஷ்டிரா), ஹொய்சாலரின் துவாரசமுத்திரம் (கர்நாடகா), வாரங்கல் பகுதியை சார்ந்த காகதியர், மதுரையைச் சார்ந்த பாண்டியர்**

# 10 முகலாயர்கள் மற்றும் நிர்வாகம்

## அரசர்கள்

- இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவியவர் **பாபர்.**
- **கி.பி.1526 ல்** நடைபெற்ற **முதல் பானிப்பட் போரில்** டெல்லி சுல்தான் இப்ராஹிம் லோடியை தோற்கடித்து முகலாய வம்சத்தின் ஆட்சியை நிறுவினார்.
- இந்தியாவை முகலாயர்கள் **1526 முதல் 1857** வரை ஆட்சி செய்தனர்.
- இந்தியாவில் முகலாயர்களின் ஆட்சியை இரண்டு பகுதிகளாக பிரிக்கலாம்.
  - **முகலாயப் பேரரசர்கள் காலம்** (1526 - 1707)
  - **முகலாய அரசர்களின் காலம்** (1707 - 1857)
- கி.பி.1707 ல் ஔரங்கசீப்பின் மறைவை தொடர்ந்து முகலாய பேரரசு வீழ்ச்சியடைய தொடங்கியது.
- கி.பி.1707 முதல் கி.பி.1857 வரை முகலாய அரசு பெயரளவுக்கு ஓர் அரசாக இயங்கியது.
- கி.பி.1857 புரட்சியின் விளைவாக அரசியல் அதிகாரம் ஆங்கிலேய அரசியாரின் கைவசம் போன போது ஆட்சியும் ஆங்கிலேயரிடம் சென்றது.

### முகலாயப் பேரரசு (1526 –1857)

முற்கால முகலாயர்கள் (1526 - 1707)

- பாபர் (1526 - 1530)
- ஹுமாயூன் (1530 - 40, 1555 - 1556)
- (சூர் வம்சம் 1540 - 1555)
- அக்பர் (1556 - 1605)
- ஜஹாங்கீர் (1605 - 1627)
- ஷாஜகான் (1627 - 1658)
- ஔரங்கசீப் (1658 - 1707)

பிற்கால முகலாயர்கள் (1707 - 1857)

- முதலாம் பகதூர்ஷா (1707 - 1712)
- ஜகந்தர் ஷா (1712 - 1713)
- பருக்ஷியார் (1713 - 1719)
- முகமது ஷா (1719 - 1748)
- அகமது ஷா (1748 - 1754)
- 2-ம் ஆலம் கீர் (1754 - 1759)
- 2-ம் ஷா ஆலம் கீர் (1759 - 1806)
- 2-ம் அக்பர் (1806 - 1837)
- 2-ம் பகதூர் ஷா (1837 -1862)

## பாபர் (1526- 1530) :


பாபர்

- முகலாயப் பேரரசை இந்தியாவில் நிறுவியவர்.
- **1483 பிப்ரவரி 14 - ல்** சாமர் கண்டில் (உஸ்பெகிஸ்தான்) பிறந்தார்.
- பாபரின் இயற்பெயர் **ஜாகிருதீன் முகமது** ஆகும். இதன் பொருள் **நம்பிக்கையை காப்பவர்** என்பதாகும்.
- பாபர் என்றால் **புலி** என்று பொருள்.
- பாபரின் தந்தை உமர் சேக் மிஷ்ரா தைமூர் இனத்தை சேர்ந்தவர். தாய் செங்கிஸ்கான் இனத்தை சார்ந்தவர்.
- முகல் எனும் வார்த்தை பாபரின் மூதாதையரிடம் காணப்படும் வார்த்தையாகும்.
- 1494 ல் தனது 11 வயதில் சாமர்கண்டை (உஸ்பெகிஸ்தான்) மரபுரிமை சொத்தாக பெற்றார்.
- ஆனால் மிக விரைவிலேயே அங்கிருந்த உஸ்பெக்குகளால் துரத்தி அடிக்கப்பட்டார்.
- அதன் பின்னர் 10 ஆண்டுகளுக்கு பின்னர் **1505-ல் காபூலை** கைப்பற்றி ஆட்சி பொறுப்பேற்றார்.
- 1505 ஆம் ஆண்டில் பாபர் தனது முதல் இந்தியப் படையெடுப்பை மேற்கொண்டார்.
- 1519 க்கும் 1524 க்கும் இடையேயான காலத்தில் அவர் பேரா, சியால்கோட், லாகூர் ஆகியவற்றின் மீது படையெடுத்து இந்துஸ்தானத்தை கைப்பற்றும் எண்ணத்தை வெளிப்படுத்தினார்.
- பாபரை இந்தியா வரும்படி அழைப்பு விடுத்தவர்கள் தௌலத்கான் லோடியின் மகன் திலாவர்கான், இப்ராஹிம் லோடியின் மாமனார் ஆலம்கான் ஆவர்.

## பாபரின் இராணுவ வெற்றிகள் :

- பாபர் இந்தியாவில் முதன் முதலில் கைப்பற்றியப் பகுதி **லாகூர்** ஆகும்.
- லாகூரை பாபர் 1525 - ல் தௌலத்கான் லோடியிடமிருந்து கைப்பற்றினார்.

## முதல் பானிபட் போர் (ஏப்ரல் 21, 1526) :

- டெல்லி சுல்தான் இப்ராஹிம் லோடிக்கும் பாபருக்கும் ஹரியானா மாநிலத்தில் உள்ள பானிப்பட் எனும் இடத்தில் **1526 - ல்** நடைபெற்ற போரில் மோதிக் கொண்டனர்.
- இப்போர் முதல் பானிப்பட் போர் என்று அழைக்கப்படுகிறது.
- இப்போரில் பாபரே வெற்றி பெற்றார்.
- பாபரின் வெற்றிக்கு காரணம்,
  - **திறமையான போர் வியூகம்**
  - **பீரங்கி படையை (Artillery) பயன்படுத்தியது.**
- இப்போரின் முடிவில் பாபர் டெல்லியையும், ஆக்ராவையும் கைப்பற்றினார்.
- இப்போரில் பெற்ற வெற்றியின் நினைவாக பாபர் **'இந்துஸ்தானத்தின் பேரரசராக'** தன்னை அறிவித்துக் கொண்டார். மேலும் பானிப்பட் நகரில் **காபூல்பாக்** என்ற **தோட்டத்தை** உருவாக்கினார்.
- இப்போரின் போது தான் இந்தியாவில் முதன் முதலில் பீரங்கிப்படை பயன்படுத்தப்பட்டது.

## கான்வா போர் (1527 மார்ச் 17) :

- மேவாரின் அரசன் **சித்தூர் ராணா சங்கா** விற்கும் பாபருக்கும் ஆக்ராவுக்கு அருகே உள்ள **கான்வா** எனும் இடத்தில் போர் மூண்டது.
- ராணா சங்காவிற்கு ஆதரவாக **இப்ராகிம் லோடியின்** சகோதரர் **முகமது லோடியும்,** மேவாட்டின் அரசன் **ஹசன்கான் மேவாட்டியும்** இருந்தனர்.
- இப்போரில் பாபர் வெற்றி பெற்று குவாலியர், தோல்பூர் ஆகிய கோட்டைகளை கைப்பற்றினார்.
- இப்போரில் வெற்றியின் நினைவாக பாபர் **'காஸி பட்டத்தைச்'** சூட்டிக் கொண்டார்.

# 11

# மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் ஆட்சி


## மராத்தியர்களின் எழுச்சிக்கான காரணங்கள்

### மக்களின் இயல்பும், புவியியல் கூறுகளும் :

- மராத்தியர்கள் வாழ்ந்தப் பகுதி **"கொங்கணம்"** என்று அழைக்கப்பட்டது.
- இவர்களுக்கு செங்குத்தான மலைகளும், எளிதில் அணுக முடியாத பள்ளத்தாக்குகளும், மலைக்கோட்டைகளும் பாதுகாப்பு அரண்களாக திகழ்ந்தன.
- **"கொரில்லா போர் தாக்குதல் முறை" (மறைந்திருந்து தாக்குதல்)** இவர்களின் வலிமையாக இருந்தது. கொரில்லா போர் முறை முன்னோடி துலுக்மா (பாபர்) - எதிர்பாரா தாக்குதல் (அ) முறைசாரா தாக்குதல்.
- இரவு நேரங்களில் திடீரென மின்னல் வேகத்தில் தாக்குதல்களை திட்டமிடுவதிலும், நடத்துவதிலும் திறமைக் கொண்டிருந்தனர்.
- பாபரின் **துலுக்மா** போர்முறையானது **கொரில்லா போர்முறைக்கு** அடிப்படையாக இருந்தது.
- மராத்திய வீரர்கள் விசுவாசம், வீரம், ஒழுக்கம், தந்திரம், எதிரிகளை தாக்கும் ஆற்றல் ஆகியவற்றில் சிறந்து விளங்கினர்.

### .பக்தி இயக்கமும் அதன் தாக்கமும் :

- பக்தி இயக்கம் மராத்தியர்களிடையே ஒற்றுமை உணர்வும் விழிப்புணர்வும் ஏற்பட உதவியது.
- மராத்திய மக்களிடையே சமூக சமத்துவத்தை மேம்படுத்தியது.
- **துக்காராம், ராம்தாஸ், ஏக்நாத்** ஆகியோர் பக்தி இயக்கத்தின் முன்னோடிகளாக திகழ்ந்தனர்.
- பக்தி இயக்கத்தின் கருத்துக்கள், போதனைகள் வட்டார மொழியான மராத்தியில் பாடப்பட்டது. மக்களிடையே பிணைப்பை ஏற்படுத்த முக்கிய காரணமாகும்.
- பக்தி இயக்க பெரியோர்களால் **மராத்தி மொழியில்** இயற்றப்பட்ட இலக்கியங்கள் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தின.
- பக்தி இயக்க பாடல்கள் அனைத்து சாதிகளையும் சேர்ந்த மக்களால் பாடப்பட்டது.


ராம்தாஸ்

### பிற காரணங்கள் :

- **பிஜப்பூர், கோல்கொண்டா** அரசுகளின் கீழ், பணி செய்த மராத்தியர்கள் இவர்களின் வீழ்ச்சிக்கு பிறகு தங்களுடைய வாழ்க்கைக்காக போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

### சிவாஜி (1627-1680) :

- **1627-ஆம்** ஆண்டு ஜூன்னார் (பூனா) என்ற இடத்திற்கு அருகில் உள்ள ஷிவ்னர் **(சிவனேரி கோட்டை)** என்ற இடத்தில் பிறந்தார்.
- பெற்றோர்: **ஷாஜி போன்ஸ்லே (ஜாகீர்தாரி) - (முதல் மனைவி) ஜீஜாபாய், (இரண்டாவது மனைவி) துர்க்கா பாய்.**
- சிவாஜியின் அரசியல் குரு, பாதுகாவலர், ஆசிரியர் - **தாதாஜி கொண்டதேவ்**
- சிவாஜியின் **ஆன்மீக குருவாக** துறவி **ராம்தாஸ்** விளங்கினார்.


**சிவாஜி**

- ஜீஜாபாய், சிவாஜியிடம் மகாபாரதம், இராமாயணக் கதைகளை கூறி அவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தினார்.
- ஷாஜி போன்ஸ்லேவின் ஜாகீர்தாரான தாதாஜி கொண்டதேவ், குதிரையேற்றம், போர்க்கலை, அரசு நிர்வாகம் ஆகியவற்றில் சிவாஜிக்கு பயிற்சி அளித்தார்.
- சிவாஜி, மனவலிமையும், அனுபவமும், அறிவும் கொண்ட மாவலியைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் தலைவர்களின் நன்மதிப்பை பெற்றார்.
- சிவாஜி மறைவுக்கு பிறகு அகமது நகர், பிஜப்பூர், கோல்கொண்டா, பிடார், பிரார் ஆகிய சுல்தான்கள் கீழ் செயல்பட்டனர்.

# 12 தென் இந்திய வரலாறு

## 12.1 சங்க காலம்

- **தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு** ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் வாழும் மாநிலங்கள் உள்ளன.
- ஆங்கிலேயர் ஆட்சியில் தென்னாட்டின் பெரும்பகுதி **சென்னை மாகாணம்** என்று அழைக்கப்பட்டது.
- சுதந்திரம் பெற்ற பின்னர், தமிழ்மொழி பேசப்படும் மாநிலமாக தனியாகப் பிரிக்கப்பட்டது. (1956-நவம்பர் 1).
- பின்பு, 1969- ஜனவரி 14-ல் அறிஞர் அண்ணா "**தமிழ்நாடு**" எனப் பெயர் மாற்றம் செய்தார்.
- நமது தமிழ்நாடு மூவேந்தர் எனப்பட்ட **சேர, சோழ, பாண்டியர்** மரபு வழியினரான மாமன்னர்களால் **பண்டைக் காலம்** முதல் ஆளப்பட்டு வந்தது.

### லெமூரியாக் கண்டம் :-

- கடற் கோளால் மூழ்கிப் போன குமரிக் கண்டத்தில் தான் பல்லுயிர்களும் பெருகுவதற்கேற்ப **தட்ப வெப்பச்சூழல்** நிலவியது. அதனால் பரிணாம வளர்ச்சி முறையில், அங்கு பேசப்பட்ட முதல் மொழியே தமிழின் மூலமொழி ஆகும்.
- அந்த இனமே தமிழ் இனமென ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அந்தப் பெருநிலத்தின் ஒரு பகுதியான தென்னாட்டில் வாழ்வோர், அந்தக் குமரிக் கண்டமாந்தர் வழி வந்த இனத்தவராகத் தான் இருக்க வேண்டும்
- இதற்கு மாறாக, குமரிக் கண்டத்திற்கு முன்னதாக அப்பகுதியை உள்ளடக்கிய ஒரு பெரும் கண்டம், **ஆப்ரிக்காவையும், ஆஸ்திரேலியாவையும் இணைக்குமாறு** நிலவியதென்றும், அந்தக் கண்டத்தில் வாழ்ந்த **லெமூர்** என்னும் **குரங்கினத்தின் பெயரால்** அக்கண்டம் **லெமூரியா** என்று பெயர் பெற்றது என்றும் அங்குத் தோன்றிய மனிதக் குரங்கே **முதல் மனிதன் பிறக்கக் காரணம்** என்றும் கூறுவர்.
- அக்கண்டத்தில் தென்னாட்டைப் போன்று **எட்டு, பத்து மடங்கு பெரிய** நிலப் பரப்பில் **பஃறுளியாறு** ஓடியது. **பன்மலை அடுக்கம்** நீண்டிருந்தது. அதுவே **பண்டை அரசான பாண்டிய நாடாக** இருக்க வேண்டும்.
- எப்படியாயினும், **முதல் மனித இனம்** குமரிக்குத் தெற்கே இருந்த கண்டத்தில் தான் தோன்றியது. அவ்வின மாந்தர் **பேசிய மொழியின் மூலமே தொன்மையான தமிழ்** ஆகும்.
- மேலும், அவர்தம் வழி வந்த மரபினர் வாழும் நிலமே **தமிழ்நாடு** என்று முடிவு செய்யப்பட்டது.

| சங்கத் தமிழகம் | |
|---|---|
| காலஅளவு | கி.மு 3 - கி.பி 3 வரை |
| புவியியல் பரப்பு | வடக்கே வேங்கடம் (திருப்பதி) - தெற்கே குமரி வரை<br>கிழக்கு - மேற்கு - கடல் எல்லைகள் |
| காலம் | இரும்புக் காலம் (ஏறத்தாழ பொ.ஆ.மு.1300 - பொ.ஆ.மு 300 வரை) |
| பண்பாடு | பெருங் கற்காலப் பண்பாடு |
| அரசுமுறை | முடியாட்சி |
| அரசர்கள் | சேர, சோழ, பாண்டிய, குறுநிலமன்னர்கள். |

**பண்டைய தமிழகத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் :-**

- தமிழகத்தில் **கி.மு இரண்டாம் நூற்றாண்டிலிருந்து** கல்வெட்டுகள் காணப்படுகின்றன.
- இங்கு ஏறக்குறைய **25,000 கல்வெட்டுகள்** இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.
- பெயர்கள் பொறிக்கப்பட்ட மண்பாண்டங்கள் **திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், அரிக்க மேட்டிலும்** கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் **செப்புப் பட்டயங்கள்** சில தோன்றியுள்ளன. அவற்றுள் **இரண்டாம் சிம்மவர்மனின் ஆறாம் நூற்றாண்டு ஆட்சி காலத்தில் (சுமார் கி.பி.550)** வெளியிடப்பட்ட **பள்ளன் கோயில் செப்புப் பட்டயங்களே** முதன் முதலாக **வடமொழியும் தமிழும்** கலந்தவையாகும்.
- சோழப் பேரரசு காலத்தில் தோன்றிய **செப்பேட்டுச் சாசனங்கள்** மிகப் பெரியவை ஆகும். அவற்றில் **மெய்க்கீர்த்திகள்** என்பவை மிக விரிவான சான்றாகும். இவற்றுள் மாபெரும் **செப்பேடு திருவாலங்காட்டுச்** செப்பேடேயாகும்.
- செப்பேடுகளின் தொடக்கத்தில் மங்கலமொழிகளான வாழ்த்துப் பாடல்களும் அவற்றைத் தொடர்ந்து கொடையளித்தவரின் மெய்க்கீர்த்தியும், அவரது பண்டைய அரச பரம்பரையின் வரலாறும் இடம்பெற்றன.
- அதற்குப் பின், **நன்கொடையின் முழு விவரமும், நன்கொடை பெறுபவரின் முழுப்பெயரும், வரலாறும்** குறிப்பிடப்பட்டிருந்தன.

| **சங்ககாலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள்** | |
|---|---|
| கல்வெட்டுகள் | ★ தமிழ்நாட்டு அரசுகளைப் பற்றி **கலிங்க அரசன் காரவேலனின் ஹதிகும்பா** கல்வெட்டு<br>★ புகளூர் (கரூர்க்கு அருகே) கல்வெட்டு<br>★ மௌரியப் பேரரசுக்கு தெற்கே இருந்த அரசுகளைப் பற்றி அசோகரின் **2,13-ம் பேராணைக்கல்வெட்டு**<br>★ **மாங்குளம், அழகர் மலை, கீழ் வளவு** ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுக்கள் (இவ்வூர்கள் அனைத்தும் மதுரைக்கு அருகில் உள்ளன) |
| செப்புப் பட்டயங்கள் | ★ **வேள்விக்குடி** மற்றும் **சின்ன மனூர்** செப்பேடுகள் |
| நாணயங்கள் | ★ சேர, சோழ, பாண்டிய குறுநில மன்னர்களின் நாணயங்கள்<br>★ **தங்கம், வெள்ளி, தாமிரத்தினாலான ரோமானிய நாணயங்கள்** |
| பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள் | ★ தொடக்க வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த **பெருங்கற்காலப் புதைவிடங்கள்**<br>★ நடுகற்கள் |
| அகழ்வாய்விலிருந்து பொருள் கிடைத்த இடங்கள் | ★ **ஆதிச்சநல்லூர், கொற்கை, அழகன்குளம், உறையூர்**<br>★ தமிழர்களின் வாணிப நடவடிக்கைகளை **அரிக்கமேடு, பூம்புகார், கொடுமணல்** அகழ்வாய்வு வெளிப் படுத்துகிறது. |
| இலக்கியச் சான்றுகள் | ★ **தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு**<br>★ **சிலப்பதிகாரம் - மணிமேகலை** |
| அயல்நாட்டவர் குறிப்புகள் | ★ கி.பி 1 நூற்றாண்டைச் சேர்ந்த தொன்மையான கிரேக்க நூலான **எரித்தியக்கடலின் பெரிப்ளஸ்** (The Periplus of Erythrean Sea)<br>★ கி.பி-1 ம் நூற்றாண்டில் **பிளினி** எழுதிய "**இயற்கை வரலாறு**" (Natural History)<br>★ கி.பி-2 ல் **தாலமி** எழுதிய "**ஜியோகிராபி**" (புவியியல்)<br>★ **மெகஸ்தனிஸின் இண்டிகா**<br>★ **ராஜாவளி, மகாவம்சம், தீபவம்சம்**<br>★ ரோமனியரின் வரைபடமான "**பியூட்டெஞ்செரியன் அட்டவணை**" (Peutingerian Table) |

# 13

# இந்திய சமூகப்பண்பாட்டு வரலாற்றில் மாற்றங்களும் தொடர்ச்சியும்

## 13.1 இந்திய பண்பாட்டின் இயல்புகள்

**பண்பாடு :**

- ✶ பண்பாடு என்பது,குறிப்பிட்ட **ஒரு நிலப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையாகும்**
- ✶ ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு **பண்பாடு** உண்டு.
- ✶ "**பண்படு**" என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்தே (வேர்ச்சொல்லிலிருந்து) **பண்பாடு** தோன்றியது.
- ✶ **பண்படுத்துதல்** என்பதற்குச் **செம்மைப்படுத்துதல் அல்லது சீர்படுத்துதல்** என்பது பொருள்.
- ✶ **பண்படுத்துதல்** என்னும் சொல் வழக்கு, **நிலத்தைப் பண்படுத்துவதற்கும், உள்ளத்தைப் பண்படுத்தவதற்கும்** பயன்படுத்தப்படுகிறது.
- ✶ "**Cultura**" என்ற **இலத்தீன் சொல்லுக்குச் சூழலுக்கு ஏற்ற வளர்ச்சி** (In conditions suitable for growth) என்று பொருள். இச்சொல்லின் திரிபே "**Cultura**" என ஆங்கிலத்தில் கூறப்படுகிறது.
- ✶ இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், **கி.பி.1937 - ல்** "**Cultura**" என்னும் சொல்லுக்கு இணையாகப் "**பண்பாடு**" என்னும் தமிழ்ச் சொல்லை **டி.கே. சிதம்பரநாதனார்** பயன்படுத்தியதாகப் பேராசிரியர் **எஸ்.வையாபுரியார்** குறிப்பிடுகிறார்.

| இலக்கியங்களில் பண்பாடு பற்றிய கருத்து | |
|---|---|
| கலித்தொகை | **பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்** |
| திருக்குறள் | **பண்புடையார்ப் பட்டுண்டு உலகு** |
| தொல்காப்பியம் | **உலகம் என்பது உயர்ந்ததோர் மேற்றே**<br>(உயர்ந்தோர் என்பது பண்பாடு உடையவர்களையே குறிக்கிறது.) |

- ✶ பண்பாடு உடையோரைச் **சான்றோர்** என்றும், **ஒழுக்கமுடையோர்** என்றும், **மாசற்ற காட்சிகளை உடையோர்** என்றும் **தமிழிலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.**
- ✶ ஓர் இனத்தாரின் பண்பாட்டை அறிந்துகொள்ள எழுத்திலக்கியங்கள் பயன்படுவதைப் போல, **நாட்டுப்புற இலக்கியங்களும்** பயன்படும்.
- ✶ மேலும், **ஓவியம் சிற்பம், கட்டடக்கலை** போன்ற கலைகளிலும் அவரவரின் பண்பாடு வெளிப்படும்.

**நாகரிகம் - விளக்கம் :**

- ✶ **நாகரிகம்** என்ற சொல் **நகர்** என்னும் சொல்லடியாகப் பிறந்தது. **நகர் + அகம் = நகரம் → நகரிகம் → நாகரிகம்.**
- ✶ **சிற்றூர் மக்களினும் நகர மக்கள் புறவாழ்விற்குரிய வசதிகள் அனைத்தும் பெற்று விளங்குபவர்கள்.**
- ✶ நகர வாழ்க்கையே **நாகரிக வாழ்க்கை** என்பது கருத்து.
- ✶ **நாகரிகம் நகரும் தன்மையுடையது.**
- ✶ புறவளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருவதைக் **நாகரிகம் என்பர்.**
- ✶ மனிதன் தன் அன்றாடத் தேவைகளின் அடிப்படையில் வாழ்க்கை வசதிகளை பெருக்கி கொண்டான். **இப்புறத் தேவைகளின் வளர்ச்சியே நாகரிக வளர்ச்சியேயாகும்.**

| பண்பாடு பற்றிய அறிஞர்களின் கருத்துகள் | |
|---|---|
| விவேகானந்தர் | ♣ "பண்பாடு அல்லது கலாச்சாரம் என்பது, சமயம், பாரம்பரியம், பொருளாதாரம் ஆகியவற்றைக்கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது". |
| தேவநேயப் பாவாணர் | ♣ "பண்படுவது பண்பாடு. பண்படுதல் என்பது சீர்படுதல் அல்லது திருந்துதல். திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும், திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம்." |
| செ. வைத்தியலிங்கம் | ♣ "பண்பாடு என்பது, பொதுவாக நாகரிகத்தில் அடங்கியதாகும். காலப்போக்கில் மக்கள் தம் வளர்ச்சியில் மனநல ஆக்கமே பண்பாடாகப் பெயர் பெறுகின்றனர்". |
| ஈ.பி. டெய்லர் | ♣ 'மனிதன் சமுதாயத்தில் ஓர் அங்கத்தினன். இந்நிலையில் அவன் அடைந்துள்ள அறிவு, நம்பிக்கை, கலை ஒழுக்கக் கோட்பாடுகள், சட்டம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை தன்னுள் அடக்கிய ஒரு முழுமையானதொகுப்பே பண்பாடு' |
| ரூத் பெனிடிக்ட் | ♣ மக்களின் சிந்தனையும், செயலும், நடவடிக்கையும் ஒவ்வோர் இனத்தவரிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுவது பண்பாடாகும். |
| வால்டேர் | ♣ "அவரவர் அன்றாடப் பணிகளை நேர்மையான மனநிலையுடனும் நேர்மையான நோக்குடனும், மகிழ்ச்சியுடனும் செய்வதில்தான் பண்பாடு மிளிர்கிறது". |
| எல்வுட் மற்றும் பிரௌன் | ♣ "பண்பாடு என்பது, இயற்கையின்மீதும் தன்மீதும் மனிதன் கொண்டிருக்கும் கட்டுப்பாடு மனிதனுடைய உடை, ஆயுதங்கள், கருவிகள், மறைவிடம், ஆன்மிகம், மொழி, இலக்கியம் போன்றவற்றை உள்ளடக்கியது". |
| சி.சி.நார்த் | ♣ "மனிதன் தன்னுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள உருவாக்கிய கருவி பண்பாடு". |
| மேத்யூ ஆர்னால்டு | ♣ "ஒருவர் தம்குணநலன்களை நிரப்புவதிலும், தம்மைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவா கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும்' |
| மாலினோசுக்கி | ♣ பண்பாடு என்பது, மக்களால் ஆக்கப்பெற்ற கருவி. இந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் அவர்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். |
| ஆடம்சம் ஒபல் | ♣ "பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயற்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இஃது, அந்தந்தச் சமூகத்திற்கு மட்டுமே உரியது. உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது". |
| கே.எம். முன்ஷி | ♣ "பண்பாடு என்பது, சீரிய வாழ்வுமுறை, இவ்வாழ்வுமுறை, மக்கள் நம்பிக்கை வைத்துள்ள அடிப்படை மதிப்பீடுகளினால் ஊக்குவிக்கப்படுகிறது." |
| அமெரிக்க மானுடவியலாளர்கள் | ♣ "தனிச் சிறப்புக்கூறுகள் நிறைந்த தனி இனச் சமுதாயத்தினரின் பண்புகளே பண்பாடு எனக் குறிப்பிடத்தக்கனவாகும்". |
| வாழ்வியற் களஞ்சியம் | ♣ மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்ததே பண்பாடு" |
| ஆங்கில அகராதி | ♣ "பயிற்சி, அனுபவம், ஆகியவற்றின்மூலம் உடல், உள்ளம், உணர்வு ஆகியன அடையும் வளர்ச்சியே பண்பாடு |

# 14 வினாத்தாள்கள்

## 14.1 TNPSC அசல் வினாத்தாள்

1. அமீர்குஸ்ரு எந்த நகரத்தை இரண்டாம் சொர்க்கம் மற்றும் மிகச் சிறந்த நீதி பரிபாலண மையம் என குறிப்பிட்டார்?
   A) மதுரா B) ஆக்ரா C) காஷ்மீரகம் D) டெல்லி

2. பொருத்துக.

| (நபர் ) | (பட்டம்) | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. ஆரியபட்டா | - 1. இந்தியாவின் நியூட்டன் | A) | 1 | 2 | 3 | 4 |
| b. ஸ்கந்தகுப்தர் | - 2. ஆசிய மற்றும் ஐரோப்பாவின் ஹீரோ | B) | 3 | 4 | 1 | 2 |
| c. சந்திரகுப்தர் II | - 3. சாகர்களை அழித்தவர் | C) | 4 | 3 | 2 | 1 |
| d. காளிதாசர் | - 4. இந்தியாவின் ஷேக்ஸ்பியர் | D) | 1 | 3 | 2 | 4 |

3. சிந்து சமவெளி மக்கள் எந்த நாடுகளுடன் வாணிப தொடர்பு கொண்டிருந்தார்கள்
   1. மத்திய ஆசியா மெசபடோமியா 2. வடகிழக்கு ஆப்கானிஸ்தான்
   3. குஜராத் மற்றும் பலுசிஸ்தான் 4. பாரசீகம்
   A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 3 மட்டும் D) 1, 2, 3, 4

4. லங்காவதார சூத்திரம் இதைப் பற்றி கூறுகிறது.
   A) மகாவீரரின் வாழ்க்கை B) மகாயான புத்தமத கொள்கைகள்
   C) இந்துமத கொள்கைகள் D) வேதங்கள்

5. “சிந்து நாகரிகம்” என்ற வார்த்தையை பயன்படுத்திய முதல் அறிஞர் யார்?
   A) மார்டிமர் வீலர் B) முனைவர் பிரான்நாத்
   C) மோரிஸ் J. ஸ்பிவாக் D) சர் ஜான் மார்ஷல்

6. முகமது கவானை எந்த பிராந்தியத்தின் ஆளுநராக ஹீமாயூன் நியமித்தார்?
   A) பிஜப்பூர் B) கோல்கொண்டா C) பெடார் D) பீரார்

7. சூரத்தில் வர்த்தக மையத்தை அமைக்க ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு அனுமதி அளித்த முகலாய பேரரசர் யார்?
   A) அக்பர் B) அவுரங்கசீப் C) ஜஹாங்கீர் D) ஷாஜகான்

8. எந்த அரச வம்சத்தின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் முதல் விதவைத் தீக்குளித்தல் நிகழ்ந்தது?
   A) சாளுக்கியர்கள் B) சோழர்கள் C) குப்தர்கள் D) மௌரியர்கள்

9. ‘மாவல்’ என்பதன் பொருள் என்ன?
   A) சிவாஜியின் படை வீரர்கள் B) மராத்திய படை அதிகாரிகள்
   C) சூரியன் மறையும் பகுதி D) பூனா பகுதியின் கிழக்கு பகுதி

10. கோவாவை போர்த்துகீசியர்கள் கைப்பற்றிய போது விஜயநகர அரசராக இருந்தவர் யார்?
    A) நரசிம்மா B) வீர நரசிம்மா C) கிருஷ்ணதேவராயர் D) அச்சுதராயர்

11. ‘சொருப் கானா’ என்ற சொல் எதை குறிக்கின்றது.
    A) செயலகம் B) மந்திரி சபை C) நாணய சாலை D) மாநில நிர்வாக அலகு

12. சிந்து சமவெளி மக்களின் முக்கிய தொழில்
    A) கால்நடை மேய்த்தல் B) உள்நாட்டு வாணிபம்
    C) வெளிநாட்டு வாணிபம் D) விவசாயம்